மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்.

# O.S.No. 1090/2023
# Old.No.750/2012
# DW 1

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நந்தகோபால் ராவ் | மதம் | : இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : தீனதயாளன் | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். இவ்வழக்கின் வாதிக்கும் சொத்தில் பாத்தியம் உண்டு என்றும் எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. சொத்தில் எனக்கு மட்டும்தான் உரிமை உண்டு. என் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சொத்தினை கிரயம்பெறுவதற்கு நானும் வாதியும் கிரயஒப்பந்தம் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் ஆம்.அதற்கான தொகையினை வாதியும் செலுத்தி உள்ளார் என்றால் சரியல்ல, முழு தொகையும் நான்தான் செலுத்தி உள்ளேன். முழு தொகையும் நான் செலுத்தியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தில் வாதி சாட்சிகையொப்பம் இட்டுள்ளார். நான் கூறுவது தவறுஎன்றும் நான் முழு தொகையும் செலுத்தியதற்கு தனிப்பட்டஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தினையும் உத்திரமேரூரில் உள்ள மற்றொரு சொத்தினையும் நானும்

வாதியும் சேர்ந்து தான் கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை நான் மட்டும் தான் கிரயம் பெற்றுள்ளேன். உத்திரமேரூரில் உள்ள சொத்தினை இருவரும் கிரயம் பெற்றுள்ளோம். வழக்கு சொத்தினை குறித்து பாகப்பிரிவினை வழக்கு ஆலந்துார் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் இவ்வழக்கினை முடிவு செய்ய இயலாது என்றால் சரியல்ல.பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

பாகப்பிரிவினை வழக்கினை குறித்து மேல்முறையீடு நிலுவையில்உள்ளது என்றால் அதைபற்றிய தகவல் எதுவும் எனக்கு கிடைக்கப்பெறவில்லை. வெவ்வேறு நீதிமன்றத்தின் வரம்பு எல்லைக்குள் சொத்துக்கள்அமைந்துள்ளதால் மேற்படி பாகப்பிரிவினை வழக்கு ஆலந்துார் சார்பு நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிக்கும் உரிமை உள்ளது என்பதால் வாதிக்கும் எனக்கும் வாடகைதாரர் உரிமையாளர் என்ற உறவுமுறை இல்லை என்றால் சரியல்ல. வாதி வாடகைதாரர்தான். பாகப்பிரிவினை வழக்கில் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதால் இவ்வழக்கினை தீர்மானிக்க இயலாது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளதால் வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.